

விம்கோ நகர் மெட்ரோ ரெயில் நிலையத்தில் வாக்களிப்பதன் அவசியம் மற்றும் கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு குறித்து விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடந்த காட்சி.

## விம்கோ நகர்மெட்ரோ ரெயில்நிலையத்தில்

# வாக்களிப்பதன்அவசியம் குறித்த விழிப்புணர்வுக்கலைநிகழ்ச்சி!

சென்னை, மார்ச்.21–

சென்னை மெட்ரோ ரெயில்நிறுவனம், பொதுமக்களுக்கும்மெட்ரோரெயிலில் பயணிக்கும்பயணிகளுக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்துவதன்ஒரு பகுதியாக, மெட்ரோரெயிலில்பயணம்செய்வதுஎவ்வளவுபாதுகாப்பானது என்பதைப்பயணிகளுக்கு தெரிவிக்கும்வகையில் மெட்ரேர ரெயில்நிலையங்கள்மற்றும்மெட்ரோ ரெயில்களில்கொரோனா வைரஸ் பரவல்தடுப்பு தொடர்பான பல்சுவை விழிப்புணர்வுக்கலைநிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

மேலும்,நடைபெறவுள்ள தமிழக சட்டப்பேரவை பொதுத்தேர்தல் 2021இல் வாக்களிப்பதன்அவசியம்குறித்த பல்சுவை விழிப்புணர்வுக்கலைநிகழ்ச்சிகளையும்நடத்திவருகிறது.

இதன்தொடர்ச்சியாக, சென்னைமெட்ரோரெயில்நிறுவனம் ' ஆன் திஸ் டீரிட் ஆப் சென்னை கலைக்குழுவினருடன்இணைந்து விம்கோ நகர் மெட்ரோ இரயில்நிலையத்தில்(தெருநிலை)மெல்லிசை விழிப்புணர்வுக்கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுமக்கள்மற்றும் மெட்ரோ பயணிகள்அவர்களின்நண்பர்கள்மற்றும்குடும்பத்தினருடன்இணைந்து இந்நிகழ்ச்சியினை கண்டு களித்தனர்.

இதனைத்தொடர்ந்து, நாளை மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை புரட்சித்தலைவர்டாக்டர்எம். ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ ரெயில்நிலையத்தில்(தெரு நிலை) சென்னை மெட்ரோ ரெயில்நிறுவனம்" நிமிர்வு கலையகம்: அமைப்புடன்இணைந்து நடத்தும்

வாக்களிப்பதன்அவசியம் மற்றும்கொரோனாவைரஸ்பரவல்தடுப்புகுறித்தபல்சுவை விழிப்புணர்வுக்கலைநிகழ்ச்சிகள்நடைபெறுகிறது.

சென்னை மாநகரில்வசிக்கும்மெட்ரோ ரெயில்பயணிகள்மற்றும் பொதுமக்கள், மெட்ரோ ரெயில்நிலையங்களில்நடைபெறும்கொரோனா வைரஸ் பரவல்தடுப்பு மற்றும்வாக்களிப்பதன்அவசியம்குறித்த விழிப்புணர்வுக் கலைநிகழ்ச்சிகளை கண்டுகளித்து விழிப்பு ணர்வுடன்இருக்குமாறு சென்னை மெட்ரோ ரெயில்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது.